பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 131** **நாள் : 04.09.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் அமைக்க மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீதிமன்றத்தால் விலக்கி கொள்ளும் பட்சத்தில் சட்ட விதிமுறைகளை பின்பற்றி அமைக்கப்பட வேண்டும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.33819/2018, நாள்.19.12.2018ல் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து சாலைகளிலும் விளம்பர பதாகைகள் மற்றும் விளம்பர தட்டிகள் வைக்க இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.61/2019 தொடுக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர்வரும் காலங்களில் மாண்புமிகு உயர்நீதி மன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்கால தடை நீதிமன்றத்தால் விலக்கிக் கொள்ளும்பட்சத்தில், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 விதி எண்.326(BB) மற்றும் Tamil Nadu Urban Local Bodies (Permission for Erection of Digital Banner and Placards) Rules_2011ல் தெரிவித்துள்ள பின்வரும் சட்டம் மற்றும் விதிமுறைகளை பொதுமக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், டிஜிட்டல் பேனர் பிரிண்டிங் சங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

(அ) ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் படிவம்–1யை பூர்த்தி செய்து அனுமதி கோரும் நாளுக்கு இரண்டு (2) நாட்களுக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் தடையின்மைச் சான்று, அமைக்கப்பட உள்ள இடம் தனியார் கட்டிடமாகவோ, அரசு நிறுவனம் சார்ந்த கட்டிடமாகவோ இருந்தால் அவர்களிடமிருந்து அதற்கான தடையின்மை சான்று, அமைக்கப்பட உள்ள இடத்திற்கான வரைபடம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு அனுமதிக்கும் (விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள்) அனுமதி கட்டணம் ரூ.200/–க்கான வரைவோலை (Demand Draft) மற்றும் ஒவ்வொரு அனுமதிக்கும் காப்பீட்டு தொகை ரூ.50/–க்கான வரைவோலை ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் பெயரில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் பின்வரும் அட்டவணையில் கண்டவாறு சாலையின் அகலத்தை பொறுத்து அனுமதி வழங்கப்படும்.

| **சாலை அகலம் (அடி)** | **அனுமதிக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் / விளம்பரத் தட்டிகள் அளவு** |
|---|---|
| (1) | (2) |
| 100 அடிக்கு மேல் | 15 அடி (உயரம்) X 24 அடி (அகலம்). |
| 60 முதல் 100 வரை | 12 அடி (உயரம்) X 20 அடி (அகலம்). |
| 40 முதல் 60 வரை | 10 அடி (உயரம்) X 16 அடி (அகலம்). |
| 20 முதல் 40 வரை | 8அடி (உயரம்) X 5 அடி (அகலம்). |
| 10 முதல் 20 வரை | 3 அடி (உயரம்) X 2.5 அடி (அகலம்). |
| சாலையின் மையத்தடுப்பில் | 4 அடி (உயரம்) X 2.5 அடி (அகலம்). |

ஈ) விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் நடைபாதை ஓரமாக அமைக்க அனுமதி வழங்கும் பட்சத்தில் இருபுற சாலையின் நடுவில் (Centre Median) அமைக்கக் கூடாது. 10 அடிக்கும் குறைவாக நடைபாதை இருக்கும் சாலைகளின் இரண்டு புறங்களும் வைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. நடைபாதைகளின் குறுக்காகவோ அல்லது சாலையின் குறுக்காகவோ அமைக்கப்படக் கூடாது. நடைபாதை அல்லது சாலைக்கு இணையாக அமைக்க வேண்டும்.

(உ) ஒரு விளம்பரப் பதாகை அல்லது விளம்பரத் தட்டிக்கும் மற்றொன்றுக்கும் இடையே குறைந்தபட்சம் 10 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். ஒரே நீளத்தில் அமைக்கப்பட வேண்டும்.

(ஊ) கல்வி நிறுவனங்கள், வழிப்பாட்டுத் தலங்கள், மருத்துவமனைகள், கல்வெட்டுகள், சிலைகள், சுற்றுலாத் தலங்கள் மற்றும் சாலை சந்திப்பு அல்லது சாலையின் ஓரத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் அமைக்கப்பட கூடாது.

(எ) விளம்பரப் பதாகைகளின் கீழ் பகுதியில் அனுமதி அளிக்கப்பட்ட நாள், அனுமதி எண், அனுமதி அளிக்கப்பட்ட அளவின் விவரம் மற்றும் அனுமதி வழங்கப்பட்ட கால அவகாசம், அச்சகத்தின் பெயர் குறித்து தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.

(ஏ) அனுமதிக்கப்பட்ட அளவைவிடவும் மற்றும் எண்ணிக்கையை விட கூடுதலான எண்ணிக்கையிலே அமைக்கப்பட்டிருந்தால் அவற்றை அனுமதி இன்றி வைக்கப்பட்ட விளம்பர பதாகையாக கருதி அவை முற்றிலுமாக அகற்றப்படும்.

(ஐ) அனுமதி வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற உடன் உடனடியாக விளம்பர பதாகைகள் மற்றும் விளம்பர தட்டிகள் அமைத்தவர்களே பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளுக்கு எந்த ஒரு இடையூறு இல்லாமல் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

(ஒ) விதிகளுக்கு மாறாக அமைத்தாலோ, பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து முறையாக அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டாலோ, அனுமதிப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக அமைத்தாலோ மற்றும் அனுமதி வழங்கப்பட்ட அளவை விட கூடுதலான அளவில் அமைத்தாலோ, மேலும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அமைத்தாலோ சம்மந்தப்பட்டவர்கள் மீது சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு எண்.326–I ன்படி காவல்துறையில் புகார் தெரிவித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஓராண்டு சிறை தண்டனை அல்லது ஒவ்வொரு விளம்பரப் பதாகைகளுக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அபராதம் விதித்தல் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனையாக விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

டிஜிட்டல் பேனர் பிரிண்டிங் சங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெற்றவர்களுக்கு மட்டுமே (பொதுமக்கள் மற்றும் அனைத்து கட்சி பிரதிநிதிகள்) விளம்பர பதாகைகள் மற்றும் விளம்பர தட்டிகளை அச்சடிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், விளம்பர பதாகைகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் அச்சடிக்கும் பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் அதன் கீழ்பகுதியில் அனுமதி அளிக்கப்பட்ட நாள், அனுமதி எண், அனுமதி அளிக்கப்பட்ட அளவின் விவரம் மற்றும் அனுமதி வழங்கப்பட்ட கால அவகாசம், அச்சகத்தின் பெயர் குறித்து தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.

அவ்வாறு அனுமதி பெறாமல் விளம்பரங்களை மேற்கொள்ள அச்சடிக்கும் பணியின் பொருட்டு தங்களிடம் வரும் பட்சத்தில் அவற்றில் அச்சடிக்கும் பணியினை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. விளம்பர பதாகைகளின் கீழ் பகுதியில் எந்த ஒரு விவரங்களும் குறிப்பிடப்படாமலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விளம்பரப் பதாகைகளில் விளம்பரங்களை மேற்கொள்ளும் அச்சகத்தின் உரிமம் ரத்து செய்து கடை மூடி சீல் வைக்க விதிகளின்படி உரிய சட்ட நடவடிக்கைகள் தொடரப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

மேற்கண்ட விதிகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், டிஜிட்டல் பேனர் பிரிண்டிங் சங்கம் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கு பெருநகர சென்னை

மாநகராட்சி ஆணையர் அவர்கள் கடந்த 21.02.2019 அன்று கலந்தாய்வு கூட்டம் நடத்தி அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் அமைக்க மாண்புமிகு உயர்நீதிமன்ற இடைக்கால தடை நீதிமன்றத்தால் விலக்கிக் கொள்ளும்பட்சத்தில், மாநகராட்சியில் முறையான அனுமதி பெற்று பொதுமக்கள், தனியர், தனியார் நிறுவனங்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் டிஜிட்டல் பேனர் பிரிண்டிங் சங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் மேற்குறிப்பிட்ட சட்ட விதிமுறைகளை தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் அவ்விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் அமைப்பவர்கள் மீது ஒராண்டு சிறைத் தண்டனை மற்றும் ஒரு விளம்பரப் பதாகைக்கு ரூ.5,000/– வீதம் தண்டத்தொகை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக எச்சரிக்கப்படுகிறது என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**